**செய்தி வெளியீடு எண்: 116** **நாள்: 11.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அரசு இ வளைதள சந்தை **(ஜெம்)**ல் அதிக அளவில் ஈடுபட்டு பயனடைய வேண்டி ஜெம் சம்வாத் என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் இன்று 11.02.2020 காலை 10.00 மணியளவில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனங்கள் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்ச்சியினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எம். சி. சம்பத் அவர்கள் தலைமையேற்று முன்னிலை உரை ஆற்றி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு பா. பெஞ்ஜமின் அவர்கள் சிறப்புரை ஆற்றி தமிழகத்தில் அரசு துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலம் அரசு இ வலைதள சந்தையில் (GeM) அதிக அளவில் கொள்முதல் செய்வதற்கும் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து தொழில் நிறுவனங்களும் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் அதிக அளவில் இச்சந்தையின் மூலம் பயனடைய வேண்டும் என விரிவாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய அளவில் 3 இலட்சத்து 25 ஆயிரத்து 865 விற்பனையாளர்கள் மற்றும் சேவை புரிவோர்கள் மூலம் 18 இலட்சத்து 63 ஆயிரத்து 545 பொருள்கள் இந்த ஜெம் போர்ட்டல் மூலம் அரசுத் துறைகள் கொள்முதல் செய்யலாம். இதுவரை இந்திய அளவில் ரூபாய் 45 ஆயிரத்து 800 கோடி அளவிற்கு ஜெம் போர்ட்டல் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

ஜெம் போர்ட்டல் மூலம் தமிழ் நாடு அரசால் 892.19 கோடி ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை சேர்ந்த 2 ஆயிரத்து 985 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஜெம் போர்ட்டலில் பதிவு செய்து ரூபாய் 311.38 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 22 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்துள்ள நிலையில் ஜெம் போர்ட்டல் மூலம் பதிவு செய்து விற்பனை செய்வதற்கான அதிகமான வாய்ப்புகள் தமிழகத்தில் உள்ளது. இதனை தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அரசு இ வலைதள சந்தையில் ஈடுபட்டு அதிக அளவில் பயனடைய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து இக்கலந்துரையாடலின் ஒரு பகுதியாகிய விரிவான விளக்கத்தினை திரு H.R. ஷர்மா, கூடுதல் தலைமை நிர்வாக அலுவலர், ஜெம் (GeM) அவர்கள் மற்றும்

திரு A.V. முரளிதரன், துணை தலைமை நிர்வாக அலுவலர், ஜெம் (GeM) அவர்களும் காலையில் விற்பனையாளர்களான தொழில் நிறுவனங்களுக்கும் மாலையில் வாங்குபவர்களான அரசு துறை மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் கணினி படக்காட்சி மூலம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இக்கலந்துரையாடலின் போது விற்பனையாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் சிற்சில சந்தேகங்களும் நிவர்த்தி செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசு செயலர்கள் தொழில் துறை செயலர் திரு என். முருகானந்தம், இ.ஆ.ப.,அவர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலர், முனைவர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., அவர்களும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., அவர்களும், நிதித் துறை சிறப்பு செயலர், திருமதி பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., அவர்களும் மற்றும் கூடுதல் ஆணையர், தொழில் வணிகத் துறை திரு T.P. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் தலைமை நிர்வாக அலுவலர், ஜெம் (GeM) திரு H.R. ஷர்மா, அவர்களும் மற்றும் மாநில வர்த்தக ஒருங்கிணைப்பாளர், ஜெம் (GeM) திரு ரமேஷ் மகாதேவன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**